Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 109/2022**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிகுமார் | கிராமம் | : | மொரப்பூர் |
| தந்தை பெயர் | : | மாது | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 57 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4**th** Day of **June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மொரப்பூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான மஞ்சுளா என்பவர் நிலைய பணி மாறுதலில் சென்ற காரணத்தினாலும், அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் இன்று நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கின்றேன்.

கடந்த 30.10.2021ம் தேதி மொரப்பூர் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பிரகாஷ் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது அம்பாலப்பட்டியைச்

சேர்ந்த திருமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த புகாரினை பெற்று மொரப்பூர் காவல் நிலைய குற்ற எண். 302/2021 சட்ட பிரிவுகள் 279, 304(A) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை அலுவலரான காவல் ஆய்வாளர் மஞ்சுளா என்பவருடைய பார்வைக்கு வைத்தார். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காவல் ஆய்வாளர் 30.10.2021ம் தேதி காலை 9 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சோமசுந்தரம் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, வாக்குமூலம் பதிவு செய்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார். **(மாதிரிவரைபடம் அசாஆ 3 ஆகவும், பார்வை மகசர் ஏற்கனவே அசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது).**

அன்றைய தினமே விபத்தில் இறந்துபோன முத்துசாமி என்பவரின் பிரேதத்தை தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரரே விசாரணை செய்து பிரே விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே இவ்வழக்கில் விபத்து ஏறப்டுத்திய TN 29 CZ 8952 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு அனுப்பியுள்ளார்.

அன்றைய தினமே விபத்தில் இறந்துபோன முத்துசாமி என்பவரின் பிரேதத்தை இறப்பின் காரணம் அறியவேண்டி முதல்நிலைக்காவலர் சரிதா என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துவர் மதன்ராஜ் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார்.

சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 12.11.2021ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய எதிரி இந்தியன் என்பவரை நிலையம் முன்பு கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

கடந்த 30.10.2021ம் தேதி விபத்தில் இறந்துபோன முத்துசாமி என்பவரது பிரேதத்தை கூறாய்வு செய்த மருத்துவர் மதன்ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் அளித்த **பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ 6 ஆக குறியீடு செய்யபடுகிறது.**

அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் அளித்த மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்றுள்ளார். **TN 29 CZ 8952 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும் இவ்வழக்கில் விபத்து ஏற்ப்டுத்திய எதிரி இந்தியன் விபத்து குறித்து முதல்நிலை காவலர் சரிதா என்பவர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து 08.12.2021ம் தேதி எதிரி இந்தியனுக்கு எதிராக சட்ட பிரிவுகள் 279, 304(A) சட்டப்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் புலன் விசாரணை செய்யவில்லை. வழக்கின் சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை. நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. அசா1 கொடுத்த

புகாரின் மீது வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன்விசாரணை மேற்கொள்ளாமலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்காமலும், வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்திலே தயார் செய்து எதிரி மீது தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**